கழக மீனவர் அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா! அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் - இரா.பொன்னார்டு வழங்குகிறார்!

# குழந்தைகளுக்கு நல உதவிகள் - மருத்துவ மாணவர்களுக்கு கல்வி நிதி!

இரா.மதிவாணன் - கே.பி.சங்கர் எம்.எல்.ஏ, -மு.தம்பிதுரை - வீ.பி.பொன்னரசு - ஆர்.பத்மநாபன் - அருமை ராசகோபால் முன்னிலை!

சென்னை, ஜூன் 16 - தமிழினத் தலைவர் ,முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூறாவது பிறந்த நாளை சிறப்பிக்கும் விதமாக கழக மாநில மீனவர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகளை மாநில மீனவர் அணி தலைவரும், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினருமான மிசா. இரா.பொன்னார்டு வழங்குகிறார்.

தமிழக முதல்வர், மீனவர்களின் பாதுகாப்பு அரண் தளபதி அவர்களின் அறிவிப்பின் படி முன்னாள் முதல்வர், தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கழக மீனவர் அணி சார்பில் சென்னை,முகப்பேர், மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவமனையில், நாளை (17.6.2023) காலை 11 மணியளவில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற உள்ளது.

நலத்திட்ட உதவிகளை கழக மீனவர் அணி செயலாளர் அ.ஜோசப் ஸ்டாலின் தலைமையில் கழக மீனவர் அணி தலைவர் மிசா இரா.பொன்னார்டு வழங்குகிறார்.

கழக மீனவர் அணி துணைத் தலைவர்கள் இரா.மதிவாணன், கே.பி. சங்கர் எம்.எல்.ஏ., மீனவர் அணி துணை செயலாளர்கள் மு.தம்பிதுரை, வீ. பி.பொன்னரசு, ஆர்.பத்மநாபன், ஜெயப்பிரகாஷ், புளோரன்ஸ், ஜீட் மற்றும் அருமை ராசகோபால்,தொழிலதிபர் செங்குன்றம் த.இளையராஜா முன்னிலை வகிக்கின்றனர்.

**குழந்தைகளுக்கு நல உதவி!**

சென்னை மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மருத்துவ மனையில் இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட குழந்தைகளுக்கு நல உதவிகள் மீனவர் அணி சார்பில் வழங்கப்படுகிறது. நிகழ்வில் மருத்துவர்கள், சமூக நல அலுவலர்கள் கலந்து கொள்கின்றனர்.

**மருத்துவப் படிப்புக்கு கட்டணம்!**

சென்னை மருத்துவ கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பயிலும் மாணவர் கோகுலுக்கு தொடர்ந்து இந்த ஆண்டு கல்வி உதவித்தொகை ரூ.30,000 மற்றும் கரூர் அரசு மருத்துவ கல்லூரியில் மூன்றாமாண்டு பயிலும் மாணவர் யோகேஷ்வரனுக்கு தொடர்ந்து இந்த ஆண்டு கல்வி கட்டணம் ரூ. 30,000 மற்றும் உயர்கல்வி நீட் தேர்வு பயிற்சிக்கான கட்டணம் ரூ. 60,000 கல்வி உதவித்தொகைகளை கழக மீனவர் அணி தலைவர் மிசா இரா. பொன்னார்டு வழங்குகிறார்.

நலத்திட்ட உதவிகள் வழங்கும் ஒருங்கிணைப்பு பணிகளை சென்னை தெற்கு மாவட்ட கழக மீனவர் அணி துணை அமைப்பாளரும்,சன் ரைட் உதய நிதி ஸ்டாலின் நற்பணி மன்ற தலைவருமான தமிழ் வளன் பொன்னார்டு மற்றும் அரிமா.செந்தில் செய்து வருகின்றனர்.

நெரிசல் மிக்க பேசின் பிரிட்ஜ்

# ரெயில்வே பராமரிப்புப் பணிகளை விரைந்து முடித்திடுவீர்!

## ரெயில்வே அமைச்சருக்கு கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம்!



சென்னை, ஜூன் 16- "நெரிசல் மிக்க பேசின் பிரிட்ஜ் ரெயில்வே பணிகளை விரைந்து முடித்திடுமாறு வலியுறுத்தி ஒன்றிய ரெயில்வே அமைச்சருக்கு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் கூறியுள்ளதாவது.

சமீபத்தில் நடைபெற்ற கோரமண்டல் இரயில் விபத்தை அடுத்து 5.06.2023 தேதியிட்ட கடிதத்தில் இதுபோன்ற விபத்துக்களைத் தவிர்க்க, இரயில் தண்டவாளங்களைத் தக்க முறையில் பராமரிக்க வேண்டும் என்றும் சிக்னல் கருவிகளைத் தரம் உயர்த்தி, பராமரிக்க வேண்டும் என்று கோரி இருந்தேன்.

அக்கடிதத்தில் நான் குறிப்பிட்டிருந்த பிரச்சனைகளை, இப்போது தமிழக மக்கள், குறிப்பாக எனது வடசென்னை தொகுதியைச் சேர்ந்த மக்கள் அவ்வப்போது எதிர்கொள்ளும் சூழல் ஏற்பட்டுள்ளது. தென்னக இரயில்வேயில், 2 பயணிகள் இரயில்கள் 48 மணி நேரத்தில், தடம் புரண்டுள்ளன.

இந்த இரண்டு தடம் புரண்ட நிகழ்வு விபத்துகளும் எனது 05.06.2023 தேதியிட்ட கடிதத்தில், நான் குறிப்பிட்டிருந்த பேசின் பிரிட்ஜி சந்திப்பில் இரயில் நிலையத்தில் ஏற்பட்டுள்ளது. நான் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி பேசின் பிரிட்ஜ் இரயில் நிலையம் தென்னக இரயில்வேயில் மிகவும் போக்குவரத்து நெரிசல் மிக்க இரயில் நிலையமாகும்.

ஜூன் 9 அன்று காலியான ஒரு ஜன்சதாப்தி இரயில், பேசின் பிரிட்ஜ் சந்திப்பில் இரயில் நிலையம் அருகே, சுத்தம் செய்வதற்காக இரயில்வே பணிமனைக்கு செல்லும் போது தடம் புரண்டுவிட்டது.

ஜூன் 11 அன்று, மூர் மார்க்கெட் காம்ப்லெக்ஸ் அருகிலிருந்து புறப்பட்ட புறநகர் இரயில் ஒன்று பேசின் பிரிட்ஜ் அருகே தடம் புரண்டு விட்டது. இந்த விபத்து காலை 10.00 மணி அளவில், பேசின் பிரிட்ஜ் வியாசர்பாடி இரயில் நிலையத்தின் இடையே நடைபெற்றதால், புறநகர் இரயில் நிலைய சேவை பாதிக்கப்பட்டு, அவற்றில் தினமும் பயணம் செய்யும் பயணிகள் பாதிக்கப்பட்டனர். தென்னக இரயில்வே பகுதிகளில் பராமரிப்பு பணிகள் சரிவர இல்லை என்று பொதுவாக சொல்லும் வேளையில், நெரிசல் மிக்க பேசின் பிரிட்ஜ் சந்திப்பு இரயில்வே நிலையத்தில் பராமரிப்பு மிகவும் மோசமாக உள்ளதைக் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஜூன் 8 அன்று தென்னக இரயில்வே பகுதியில் அடங்கியுள்ள குன்னூர் பகுதியில், மலை ரயில் விபத்துக்குள்ளானதையும் சுட்டிக் காட்டுகிறேன்.

அதிர்ஷ்டவசமாக, இவ்விபத்துக்குகளினால், பயணிகள் யாரும் காயமடையவில்லை. ஆனால், இந்த இரயில்வே தண்டவாளங்கள், சிக்னல் போன்றன சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பது ஒரே இடத்தில் அடிக்கடி விபத்து ஏற்படுவதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது. எனவே இரயில்வே துறை பராமரிப்புப் பணிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இது போன்ற விபத்துக்களால் பயணிகள் பாதிக்கப்படும் போது மட்டும் இரயில்வே நிர்வாகம் விரைவாக செயல்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது.

எனவே, இரயில்வே தண்டவாளங்களையும், சொத்துக்களையும் முறையாகப் பராமரிக்க வேண்டும் என்பதைத் தாங்கள் அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்றும், மேலும் சிறப்பான பராமரிப்புப் போதுமான பணியாளர்கள் தேவை என்பதால், காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டும் என்று வேண்டி கேட்டுக் கொள்கின்றேன்.

முக்கியமான டெக்னிக்கல் பணியிடங்கள் கூட பெருமளவில் காலியாக உள்ளது என்று கூறப்படுகிறது. 5 ஆண்டுகளுக்கு முன்பு பணியாளர்கள் தேர்வு நடைபெற்றதாகக் கூறப்படுகிறது. இவ்வாறு நீண்ட காலத்துக்கு ஒரு முறை ஆட்கள் நியமனம் செய்யப்படுவதைத் தவிர்த்து ஆண்டு தோறும் முறையாக பணியாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணி இடங்கள் நிரப்பப்படுவது, பராமரிப்பு பணிக்கு ஒரு முக்கிய தேவையாகும். எனது முந்தைய 05.06.2023 தேதியிட்ட கடிதத்தில் கூட இது குறித்து நான் குறிப்பிட்டிருந்ததை மீண்டும் நினைவு படுத்துகின்றேன் மீண்டும் இந்த கருத்தை நான் வலியுறுத்திக் கூறுகின்றேன்.

உடனடியாக இரயில்வே துறைக்குத் தேவையான வோக்கோ ஓட்டுநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், சிவில், மெக்கானிக்கல் பொறியாளர்கள் போன்றவர்களை நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். மேலும், சமீபத்தில், தென்னக இரயில்வே அதிகாரிகளுடன் உரையாடும் போது, இவற்றுக்கெல்லாம் போதிய அளவில் நிதி வசதி இல்லை என்பதை அறிந்து கொண்டேன். எனவே, போதுமான நிதி ஒதுக்கீடு பெறுவதற்கும் தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். உடனடியாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப் பட்டால் இரயில் விபத்துக்களைத் தவிர்க்கலாம். எனவே, விரைவில் நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அக்கடிதத்தில் கூறியுள்ளார்.

ஒரே நாளில் 300 பேருக்கு ஓய்வூதிய ஆணை:

# முதல்வருக்கு கிராம கோவில் பூசாரிகள் நன்றி!

## மாநிலத் தலைவர் பி.வாசு அறிக்கை!

சேலம், ஜூன்.16- இதுவரை எப்போதும் இல்லாத அளவிற்கு ஒரே நாளில் 300 கிராம கோவில் பூசாரிகளுக்கு ஓய்வூதியம் வழங்க ஆணை பிறப்பித்த முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கிராம கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி.வாசு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

முதல்வர் அவர்கள் தலைமையிலான நல்லாட்சியில் 60 வயதிற்கு மேற்பட்ட கிராம கோவில் பூசாரிகள் 300 பேருக்கு இந்து சமய அறநிலையத் துறை மூலம் ஓய்வூதியம் வழங்க ஒரே நாளில் ஆணை பிறப்பிக்க வழி வகை செய்தது தமிழக வரலாற்றில் பொன் எழுத்துக்களால் போற்றப்பட வேண்டிய விஷயமாகும்.

சேலத்தை தலைமை இடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கம் கிராம கோவில் பூசாரிகள் நலனுக்காக தன்னலமற்ற சேவைகளைச் செய்து வருகிறது. வருவாய்க்கு வழியற்ற 60 வயதிற்கு மேற்பட்ட கிராம கோவில் பூசாரிகளுக்கு இந்து சமய அறநிலையத் துறை மூலம் ஓய்வூதியம் பெற்றுத்தர உதவிகரமாகச் செயல்பட்டு வருகிறது

இந்நிலையில் கிராம கோவில் பூசாரிகள் ஓய்வூதியத் தேர்வுக் குழுக் கூட்டம் 14-6-2023 புதன்கிழமை அன்று சென்னை நுங்கம்பாக்கம் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் அலுவலகத்தில் ஆணையர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கோவில் பூசாரிகள் நலச் சங்க மாநிலத் தலைவர் பி. வாசு பூசாரி பங்கேற்று பயனாளிகளைத் தேர்வு செய்வதில் உதவிகரமாகச் செயல்பட்டார்.

300க்கும் மேற்பட்ட முதிய பூசாரிகள் மாதம் ரூ.4000 ஓய்வூதியம் பெறத் தகுதி பெற்றனர். அவர்களுக்கு இந்து சமய அறநிலையத்துறை மூலம் ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை விரைவில் அனுப்பி வைக்கப்பட உள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த அதிக பயனாளிகள் இம்முறை தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

ஏழ்மை நிலையில் உள்ள கிராம கோவில் பூசாரிகளின் வாழ்வை வளமாக்க தமிழ்நாடு முதல்வர் அவர்களும் இந்து சமய அறநிலைத் துறை அமைச்சர் அவர்களும் மேற்கொண்டு வரும் செயல் திட்டங்கள் தமிழக மக்களிடையே பெரும் பாராட்டைப் பெற்று வருகின்றன.

தமிழ்நாடு முதல்வர் அவர்கள் திராவிட மாடல் அரசை மிகச் சிறப்பாக நடத்தி வருகிறார். எனவே தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும் அவருடைய மேலான தலைமையின் கீழ் செயல்பட்டு கிராம கோவில் பூசாரிகளுக்கு பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வரும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அவர்களுக்கும் சேலத்தை தலைமையிடமாகக் கொண்ட கோவில் பூசாரிகள் நலச் சங்கத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் திராவிட மாடல் ஆன்மீக அரசுக்கு தமிழ்நாடு முழுவதும் உள்ள ஆறு லட்சம் கோவில் பூசாரிகள் நன்றிக் கடன்பட்டுள்ளனர். தமிழ்நாடு முதல்வர் அவர்களின் நல்லாட்சி தொடர பூசாரிகள் அனைவரும் உறுதுணையாகச் செயல்படுவார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



நீலகிரி மாவட்டம் உதகையில் நடைபெற்ற திமுக உள்ளாட்சி பிரதிநிதிகள் கூட்டத்தில், மாவட்ட செயலாளர் பா.மு. முபாரக் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட ஊராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக படகு குழாம்களில்

# 2 மாதங்களில் 13 லட்சம் பேர் படகு சவாரி செய்து சாதனை!

## அமைச்சர் கா.ராமச்சந்திரன் அறிவிப்பு!



சென்னை, ஜூன்.16- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் படகு குழாம்களில் 2023 ஏப்ரல், மே மாதங்களில் மொத்தம் 13,11,157 சுற்றுலா பயணிகள் படகு சவாரி மேற்கொண்டு நெஞ்சம் நிறைந்த, நீங்காத அனுபவங்களை பெற்றனர் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை, சுற்றுலா வளாக கூட்டரங்கில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவகங்கள், படகு குழாம்கள் குறித்த மேலாளர்கள் மற்றும் மண்டல மேலாளர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு முதன்மை செயலாளர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைவர் டாக்டர். க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் சந்தீப் நந்தூரி ஆகியோர் முன்னிலையில் நேற்று (15.06.2023) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் பேசுகையில் தெரிவித்ததாவது, தமிழ்நாட்டின் வளர்ச்சியில் முக்கிய பங்கை அளித்த முத்தமிழறிஞர் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டில் உருவாக்கினார்கள். நாட்டின் அன்னிய செலாவணி வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றும் சுற்றுலாத்துறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், சுற்றுலாத் பயணத் திட்டங்கள், சுற்றுலா பேருந்து சேவைகள், படகு சேவைகள், தொலைநோக்கி இல்லங்கள் என சுற்றுலா பயணிகளுக்கு பல்வேறு சேவைகளை வழங்கி வருகின்றது.

கொரோனாவால் பாதிக்கப்பட்டு இருந்த சுற்றுலாத்துறை முதலமைச்சர் அவர்களின் சீரிய முயற்சிகளால் உணவங்கள், தங்கும் விடுதிகள் புதுப்பிக்கப்பட்டு, புதுப்பொலிவு பெற்றதன் காரணமாக விரைவான வளர்ச்சியை பெற்று இந்தியாவிலேயே சுற்றுலாத் துறையில் முதன்மை மாநிலமாக விளங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு முழுவதும் 28 ஓட்டல்களை நேரடியாக நிருவகித்து வருகின்றது. இவற்றில் 473 குளிரூட்டப்பட்ட அறைகளும், 199 சாதாரண அறைகளும், மலைப்பகுதி சுற்றுலாத்தலங்களில் 172 அறைகளும் என மொத்தம் 845 அறைகள் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் மற்றும் உணவகங்கள் பொதுமக்கள் எளிதில் அணுகும் வகையில் நகரின் மையப்பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தங்கும் விடுதிகளில் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு கட்டண சலுகைகள் அளிக்கப்படுகின்றது. மேலும் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு மொத்தமாக அனைத்து அறைகளையும் பதிவு செய்பவர்களுக்கும், தொடர்ந்து 3 நாட்களுக்கு மேல் தங்குபவர்கள், வெவ்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து 3 நாட்களாக தங்குபவர்களுக்கு என, பல வகையான கட்டண சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும் சுற்றுலாப் பயணிகளுக்கு நினைவில் நீங்காத அனுபவத்தை தரும் வகையில், சாகச படகு சவாரி மற்றும் நீர் விளையாட்டுகளுடன் கூடிய படகு குழாம்களை முட்டுக்காடு, முதலியார் குப்பம், உதகமண்டலம், பைக்காரா, கொடைக்கானல், ஏற்காடு, பிச்சாவரம், குற்றாலம் மற்றும் வாலாங்குளம் ஏரி உள்ளிட்ட 9 இடங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் படகு குழாம்களை இயக்கி வருகிறது. வாட்டர் ஸ்கூட்டர்கள், மோட்டர் படகுகள், விரைவு படகுகள், மிதிப்படகுகள், துடுப்பு படகுகள், வாட்டர் சைக்கிள்கள், குழந்தைகளுக்கான மிதிப்படகுகள் என மொத்தம் 588 படகுகள் சுற்றுலா பயணிகளுக்கு நீங்காத அனுபவங்களை அளித்து வருகின்றன.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல், மே மாதங்களில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் படகு குழாம்கள் மூலமாக இயக்கப்படும் படகுகளில் மொத்தம் 13,11,157 சுற்றுலா பயணிகள் படகு பயணம் மேற்கொண்டு நீங்காத அனுபவங்களை பெற்றனர். இவற்றில் மலைப்பகுதி சுற்றுலா தலங்களான ஊட்டியில் 6,81,140 சுற்றுலா பயணிகளும், கொடைக்கானலில் 2,29,840 சுற்றுலா பயணிகளும், ஏற்காட்டில் 1,57,753 சுற்றுலா பயணிகளும் படகு பயணம் மேற்கொண்டனர்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழகம் மிகவும் சிறப்பான முன்னேற்றத்தை அடைய மேலாளர்கள், மண்டல மேலாளர்கள் தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள், அமுதகம் உணவு விடுதிகள், படகு குழாம்கள் மூலமாக அதிக லாபம் ஈட்டும் வகையில், பொதுமக்கள் அதிக அளவில் வருகை தருவதற்கான முயற்சிகளை ஆர்வத்தோடு மேற்கொள்ள வேண்டும். மேலும் தங்கும் விடுதி அறைகளை சிறப்பாக பராமரித்தல், பொதுமக்களை ஈர்க்கும் வகையான உணவு வகைகளை தயாரித்து வழங்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் பொதுமேலாளர் திருமதி.வி.பாரதி தேவி, முதன்மை கணக்கு அலுவலர் எஸ்.கணேஷ் கார்த்திகேயன், உதவி தலைமை மேலாளர் (ஓட்டல்கள்) சௌ.வெங்கடேசன், திட்ட பொறியாளர் பால் ஜெப ஞானதாஸ் உள்பட மண்டல மேலாளர்கள், மேலாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

வட்டச் செயலாளர் இரா.அரிதாஸ் தலைமை! கலைஞர் 100வது பிறந்தநாள் தொடக்க விழா!

# பெரம்பூர் வடக்கு - 35 'அ' வட்டத்தில் பொதுக்கூட்டம்!

தா.இளைய அருணா - தமிழன் பிரசன்னா - அத்திப்பட்டு சாம்ராஜ் - சிவாஜி கிருஷ்ணமூர்த்தி சிறப்புரை!

சென்னை, ஜூன் 16- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாள் தொடக்க விழாவை முன்னிட்டு, பெரம்பூர் வடக்குப் பகுதி - 35 'அ' வட்டத்தில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இன்று (16.6.2023-வெள்ளிக்கிழமை) மாலை 6 மணி அளவில் எருக்கஞ்சேரி - கிருஷ்ணமூர்த்தி சாலையில் நடைபெறும் இப்பொதுக்கூட்டத்திற்கு வட்டச் செயலாளர் இரா.அரிதாஸ் தலைமை வகிக்கிறார்.

ஏ.ஜியாவுதீன், இரா. லீலாவேலு, ஏ.செந்தூர் பாண்டியன், எம்.லதா, எஸ்.கோவர்தனன், மாசி. முருகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

டி.குலசேகரன், ஐ.பெலிக்ஸ் (எ) ஞானபிரகாஷ், ஜெ.ஜெயவேந்தன், வி.ஜமுனா, எஸ்.வி.நாகப்பன், த.பாஸ்கரன், எம். ஆரோக்கியம், ஜெ.குமார், டி.எம்.கலையரசன், (எ) டைசன், இரா.சம்மந்தம், எம்.ரூபன், ஜி.திருமுருகன், ஏ.சாகுல் அமீது, கே. சுரேஷ்கண்ணன், ஜெ.லோகநாதன், எஸ்.ராஜேந்திரன், ஏ.ஏழுமலை, செ.சாந்தகுமார், எம்.ஜெயந்தி, எம்.அம்பிகா ஆகியோர் வரவேற்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, அத்திப்பட்டு சாம்ராஜ், சிவாஜி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. இரா.கருணாநிதி, இரா.நரேந்திரன், அ. முருகன், க.ஜெயராமன், ஆர்.வெற்றிவீரன், எஸ். ஆர்.கமலக்கண்ணன், மு. கோவி, வி.தயாளன், க.நாகம்மை, மு.சாகுல்ஹமீது, எஸ்.சாக்ரடீஸ், வி. வேதா, வி.எஸ்.பிரபு, இரா. ஜோதிமணி, ஏ.தமிழ்ச்செல்வன், டி.கமலக்கண்ணன், ப.மதிவாணன், க.அமுல், க.சர்மிளா காந்தி, ந.சர்ப ஜெயாதாஸ், ஏ.ஆர்.ஆர். மலைச்சாமி, சி.ஆனந்தி, கே.வி.ராஜன், என்.கார்த்திபன், மு.உமாபதி, சி. எஸ்.இரவி, கே.செந்தமிழரசு, க.பாபு, த.ஆறுமுகம், ஆர்.எஸ்.மனோ கரன், ஜி. மாரிமுத்து, கி.தினகரன், வி.முருகன், எஸ்.எம். ஜாவித், எம்.சரவணன், இ. சையத்அலி கான், எஸ். டி.சேகர்வர்மா, என்.நந்தகோபால், எம்.அருண்சக்ரவர்த்தி, மு. பழனி, ச.சச்சிதானந்தம், நா.வீரமத்து, பி.சண்முகம், எஸ்.செபஸ்டீன், நா.திருமலை, இரா. முரளிதரன், கி.ராஜி, கு. பரத், என்.மனோகரன் உள்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

ஏ.சரவணன் நன்றி கூறுகிறார்.

ர.இம்ரான் ஏற்பாடு! எம்.ரவி தலைமை!

# தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா!

தா.இளையஅருணா, வ.பெ.சுரேஷ்,மு.கோபி, விஜயலட்சமி, ரமேஷ்பாபு பங்கேற்பு !

சென்னை ஜூன்:16 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு அங்கன்வாடியில் இருந்து ஆரம்ப கல்வி பயில பள்ளிக்குச் செல்லும் மழலைச் செல்வங்களுக்கு

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணியின் சார்பாக மாவட்டத் துணை அமைப்பாளர் ர.இம்ரான் ஏற்பாட்டில் 48 (அ) வட்ட கழகச் செயலாளர் எம்.ரவி தலைமையில் வ.பெ.சுரேஷ்,மு. கோபி, நா.சண்முகம், வி. விஜயலட்சுமி, ஆ.ரமேஷ் பாபு, ஆகியோர் முன்னிலையில் புத்தகபை, நோட்டு புத்தகம், பென்சில் பாக்ஸ்,கரும்பலகை, டிபன் பாக்ஸ்,தண்ணீர் பாட்டில் ஆகிய நலத்திட்ட உதவிகளை சென்னை வடக்கு மாவட்ட கழகச் செயலாளரும் பெருநகர சென்னை மாநகராட்சி நகரமைப்பு குழு தலைவருமான தா. இளையஅருணா வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் நாகம்மை கருப்பையா, கி. ராஜேந்திரன், ரெயின்போ என்.விஜயகுமார், ப. சோமசுந்தரமூர்த்தி, பகுதி நிர்வாகிகள் எம்.கே.இஸ்மாயில், கு.ரமேஷ், எஸ். திருஞானம், இ.மதன், வட்ட கழக செயலாளர்கள் பாலலட்சுமணன், பெ.கண்ணன், ஆர். வி.கணேஷ், அத்தோ பி.முனுசாமி, வி.குமார், மோ. ரவிக்குமார், கே.அக்தரிபேகம், ஆ.ரமேஷ், த.குமரேசன், கார்த்திக் செங்குட்டுவன், அப்துல் மாலிக், வி.பிரேம், சுதாகர், ரெடிமேட் செந்தில், சதீஷ், ஐ.ரஜோஷ், எம். எம்.சுஜாவுதீன்,

ஐசரி சரவணன், ஜி.கொலம்பஸ், மு.இராசன்,பி.கலீல், எஸ்.இந்திரா, எம்.குமரவேல், ஜி. ரசூல்பி, ஹமிர்அசன், ஹமீது, பார்வதிபாய், ஆர்.அமின், பி.ராஜேஸ்வரி, அபிசுல்லா, முகம்மது, சுபேர், அகமத், கௌஷ், மாலிக், அல்தாப் சல்மான்,பயாஸ்பாஷா, உள்ளிட்ட கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

ஜி.தனசேகர் எப்.லியாகத்பாஷா, எம்.அருண்குமார், ஆகியோர் நன்றி கூறினர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இரா.கி.பேட்டை ஒன்றியம் பத்மாபுரம் ஆஞ்சநேயர் கோவில் சாலையில் ரூ 46.45 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் புதிய தார் சாலை அமைத்தல் பணியை திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழக செயலாளர் பெ.பழனி, சி.என். சண்முகம் ஒன்றிய குழு துணை தலைவர் ரஞ்தா, ஒன்றிய குழு துணைத் தலைவர் திலகவதிரமேஷ் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.